**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.2**
**MCOP.NO.248/2020**

| | | |
|---|---|---|
| **NAME** | : | ஸ்ரீநாத் |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 26.08.2022.**

முதல் விசாரணை

நான் என்னுடைய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எனக்கு படித்து காண்பித்தார்கள் தெரிந்து கொண்டுதான் கையொப்பம் செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் மனுதாரருக்கு சொந்தம் கிடையாது. எங்கள் ஊர்க்காரர் சொல்லி வழக்கு உள்ள விவரம் தெரியும். என்னை இன்று அம்சவள்ளிதான் அழைத்து வந்தார். என்னுடைய விலாசம் சென்னை. விபத்து நடந்த இடம் ஆம்பூர் பக்கத்தில் உமராபாத் என்ற இடம். நான் விபத்தை பார்த்ததாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் திருமண வரவேற்பில் கலந்து கொள்ள அங்கு வந்தேன். என் நண்பரின் விசேஷத்திற்கு வந்தேன். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நின்று கொண்டிருந்த மோதிதான் விபத்து ஏற்பட்டது என்றாலும் நான் சொல்வது போல விபத்து நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் போலீசில் சொன்னேன். வழக்கில் நான் சாட்சியாக சொன்னேன். நான் மனுதாரருக்கு வேண்டப்பட்டவர் என்பதால் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.